(5) அரசினர் தீர்மானங்கள்.

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலை 11 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரம் வீசிய திரு. திருமறவனின் செயல் கண்டிக்கத் தக்கதும், அவையை அவமதிக்கும் செயலும் ஆகும். எனவே இதுகுறித்த தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

இன்று முற்பகல் 11 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டறிக்கைகளைப் பேரவைக்குள்ளே வீசி எறிந்து குரல் எழுப்பியதன் காரணமாக காவலில் வைக்கப்பட்டுள்ள சிவகங்கை திரு. இராம சாமி சேர்வை மகன் திருமறவன் என்று கூறிக்கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் இன்று மாலை ஐந்து மணி வரை வெறும் காவல் தண்டனை (simple imprisonment) அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டு மென்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

(11) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையின்மீது பேச கிடைத்த வாய்ப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கையின் கோர சீற்றத்தையும் எதிர்ப்பட்ட பல்வேறு எதிர்ப்புகளையும் வேண்டுமென்றே தூண்டிவிடப்பட்ட பல்வேறு போராட்டங்களையும் மிக எளிதாகச் சமாளித்து ஓராண்டு ஆட்சியை உலகமே பாராட்டும் அளவுக்கு நிறைவு பெறச் செய்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் ஆட்சிக்கு மேலும் புகழ் சேர்க்கும் வண்ணம் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி முழு அமைதிப் பணி புரட்சிக்கு வித்திடுவதாய் அமைந்துள்ள மேதகு ஆளுநரின் உரையை மீண்டும் வரவேற்று திரு. மணி மாறன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து நானும் வரவேற்றுப் பேச விழைகிறேன்.